செய்தி வெளியீடு எண்: 27 நாள்: 15.10.2019.

**தேனி மாவட்டம்,**

**சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து முதல் போக சாகுபடிக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தண்ணீரை திறந்து வைத்தார்:-**

---

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து முதல்போக சாகுபடிக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.10.2019) தண்ணீரை திறந்து வைத்து, தெரிவித்ததாவது,

தமிழக அரசின் உத்தரவின்படி, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமம், வராகநதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயிகளின் நலன் கருதி பாசனத்திற்காகவும் மற்றும் பெரியகுளம் நகராட்சி குடிநீர் தேவைக்காகவும், இன்றைய தினம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன்மூலம் 1825 ஏக்கர் பழைய நன்செய் பாசன நிலங்களும், 1040 ஏக்கர் புதிய புன்செய் பாசன நிலங்களும், என மொத்தம் 2865 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இதில், முதல்போக சாகுபடிக்காக 15.10.2019 முதல் 15.12.2019 வரை 62 நாட்களுக்கு வினாடிக்கு 30 கனஅடி வீதமும், 16.12.2019 முதல் 15.01.2020 வரை 31 நாட்களுக்கு வினாடிக்கு 27 கனஅடி வீதமும், 16.01.2020 முதல் 15.03.2020 வரை உள்ள 59 நாட்களுக்கு வினாடிக்கு 25 கனஅடி வீதமும் ஆக மொத்தம் 152 நாட்களுக்கு 360.46 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேலும், நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தினைப் பொறுத்து, தண்ணீர் திறந்து விடப்படும்.

மேலும், இதன் மூலம் பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட தென்கரை, லெட்சுமிபுரம், தாமரைக்குளம், ஆகிய கிராமங்கள் பாசன வசதிக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனவே, வேளாண் பெருங்குடி மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு, உயர் மகசூல் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, செயற்பொறியாளர் எஸ்.கவிதா, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் ச.ஜெயப்பிரித்தா, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) செயற்பொறியாளர் சுந்தரப்பன், உதவி செயற்பொறியாளர் தமிழ்செல்வன், பெரியகுளம் முன்னாள் நகர்மன்றத் தலைவர் ஓ.ராஜா, பெரியகுளம் வட்டாட்சியர் ரத்தினமாலா மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**